//அவசரம்//

அனுப்புநர்
திரு.ஆ.ர.ராகுல் நாத் இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
செங்கல்பட்டு

பெறுநர்
மாவட்ட வன அலுவலர்,
சென்னை கோட்டம்,
DMS வளாகம், தேனாம்பேட்டை,
சென்னை – 600 018

ந.க.9859 / 2021 / ஆ3 , நாள். 23.12.2022

அய்யா,

பொருள்- நிலம் ஒதுக்கீடு - செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் கோட்டம், வண்டலூர் ஒதுக்கப்பட்ட காடுகள் வகைப்பாடு கொண்ட புலத்தில் நெடுஞ்சாலைத் துறைக்கு 4.46.0 ஹெக்டேர் நிலத்தினை நிலமாற்றம் செய்வதற்கு ஈடாக இருமடங்கான 8.92.0 ஹெக்டேர் நிலத்தினை செங்கல்பட்டு வட்டம், நெ.78. வேதநாராயணபுரம் கிராமம், அரசு புறம்போக்கு மலை வகைப்பாடு கொண்ட புல எண்.96-1 -ல் பரப்பு 8.92.0 ஹெக்டேர் நிலத்தினை வனத்துறைக்கு நிலமாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டது – இசைவு கோருதல் - தொடர்பாக.

பார்வை-
1) Deputy Secretary to Government, Highways and Minor Ports (HW1) Department, Secretariat, Chennai-600 009, Ltr. No.8461/HW1/2021-1, dated: 20.07.2021
2) இவ்வலுவலக கடித ந.க. 11674 / 2020 / ஆ3, நாள்.27.07.2021
3) தாம்பரம் வட்டாட்சியரின் அறிக்கை ந.க.3950-2021-ஆ2, நாள்.30.07.2021
4) மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியரின் அறிக்கை ந.க.2134 / 2021 / , நாள்.05.08.2021
5) கோட்டப்பொறியாளர் (நெ), சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம், கோட்டம் -1, கிண்டி, சென்னை - 32 அவர்களின் கடித எண். 976 / 2018 / TEB forest / JDO/ dated. 30.11. 2021 மற்றும் 03.06.2022
6) இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள்.15.11.2022

--------------

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் கோட்டம், வண்டலூர் ஒதுக்கப்பட்ட காடுகள் வகைப்பாடு கொண்ட புலத்தில் நெடுஞ்சாலைத்துறைக்கு 4.46.0 ஹெக்டேர் நிலத்தினை நிலமாற்றம் செய்வதற்கு ஈடாக இருமடங்கான 8.92.0 ஹெக்டேர் நிலத்தினை

வனத்துறைக்கு நிலமாற்றம் செய்ய பார்வை 1-ல் காணும் அரசு துணை செயலாளர், நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள், தலைமை செயலகம், சென்னை -9 அவர்களின் கடிதம் வரப்பெற்றது.

இது தொடர்பாக பார்வை 3-ல் காணும் தாம்பரம் வட்டாட்சியரின் கடிதத்தில் தாம்பரம் வட்டத்தினை சார்ந்த கிராமங்களில் வனத்துறைக்கு மாற்று புலமாக வழங்குவதற்கு நிலம் ஏதும் இல்லை என தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்படி பொருள் தொடர்பாக செங்கல்பட்டு வட்டாட்சியரிடம் அறிக்கை கோரியதற்கு, செங்கல்பட்டு வட்டம், நெ.78. வேதநாராயணபுரம் கிராமம், அரசு புறம்போக்கு தேவர் மலை வகைப்பாடு கொண்ட புல எண்.96-1 -ல் பரப்பு 8.92.0 ஹெக்டேர் நிலத்தினை வனத்துறைக்கு நிலமாற்றம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மேற்கண்ட தங்கள் துறைக்கு நிலமாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள வனத்துறை நிலங்களுக்கு ஈடான மாற்று புலமாக செங்கல்பட்டு வட்டம், நெ.78.வேதநாராயணபுரம் கிராமத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இப்புலமானது ஏற்கனவே வனத்துறையினரால் ஒதுக்கப்பட்ட காடுகள் என அறிவிக்கை செய்வதற்கு உகந்தது என தெரிவிக்கப்பட்ட புலமாகும்.

எனவே, செங்கல்பட்டு மாவட்டம், நெ.78. வேதநாராயணபுரம் கிராமம், அரசு புறம்போக்கு மலை வகைப்பாடு கொண்ட புல எண்.96-1 -ல் பரப்பு 8.92.0 ஹெக்டேர் நிலத்தினை வனத்துறைக்கு மாற்று புலமாக வழங்க ஏதுவாக உள்ளதா என்பது குறித்து புலத்தணிக்கை செய்து, தங்கள் துறையின் இசைவினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒம் / -ஆ.ர.ராகுல் நாத்
மாவட்ட ஆட்சியர்,
செங்கல்பட்டு

// உத்தரவின்படி //

23/12/22

மாவட்ட ஆட்சியருக்காக,

23/12/2022